நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No.104/2020**

**P.W.12 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜீவா |
| தந்தை / கணவர் பெயர் | : | சரவணன் |
| கிராமம் | : | – |
| வட்டம் | : | திருச்செங்கோடு |
| மாவட்டம் | : | நாமக்கல் |
| சாட்சி வரிசை எண் | : | PW12 |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**3 ம் எதிரி ஆஜர் மற்ற எதிரிகள் ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.36PM

1. நான் தற்போது அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.11.2019 அன்று ஆண்கள் அறுவைச்சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது சுமார் 35 வயதுடைய திரு. தங்கராஜ் என்பவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார்.

2. நான் அவரை பரிசோதித்து அவருக்கு தேவையான சிகிச்சை அளித்தேன். அவருக்கு Xray மற்றும் CT Scan எடுக்கப்பட்டிருந்தது. அவருக்கு மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவர், எலும்பு முறிவு மருத்துவர், ஒட்டு உறுப்பு அறுவை சிகிச்சை மருத்துவர், காது மூக்கு தொண்டை மருத்துவர் மற்றும் பல் மருத்துவரின் ஆலோசனை பெறப்பட்டது. அதன் பேரில் அவருக்கு மூக்கில் ஏற்பட்ட எலும்பு முறிவு காயம் அதாவது விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 3 வது காயம் கொடுங்காயம் என சான்றளிக்கப்பட்டு அவரை மருத்துவமனையில் இருந்து 16.11.2019 ம் தேதி விடுவித்தேன். மற்ற காயங்கள் சாதாரண காயம் எனவும் சான்றளித்தேன். (**சேலம் அரசு மருத்துவமனையில் காயம்பட்ட தங்கராஜுக்கு வழங்கப்பட்ட Discharge Summary அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

3. **சேலம் அரசு மருத்துவமனையில் தங்கராஜுக்கு எடுக்கப்பட்ட CT Brain மற்றும் CT Facial எலும்புகள் ஆகியவற்றிக்கு எடுக்கப்பட்ட CT படங்கள் 2 எண்ணிக்கை அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) ( தங்கராஜுன் CT Scan Report அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் தங்கராஜ்க்கு மூக்கெலும்பு உடைந்திருப்பதாக சான்றளித்துள்ளார். )

4. நான் உள்நோயாளியாக இருந்த தங்கராஜ்க்கு 06.11.2019 மற்றும் 07.11.2019, 08.11.2019, 09.11.2019 ஆகிய தேதிகளில் சிகிச்சை அளித்தேன். மற்றும் 13.11.2019, 14.11.2019, 16.11.2019 ம் தேதிகளில் சிகிச்சை அளித்து 16.11.2019 ம் தேதி அவரை விடுவித்தேன். **(தங்கராஜுன் சேலம் அரசு மருத்துமவமனையின் மருத்துவ சிகிச்சை குறிப்புகள் அடங்கிய கோப்பு சான்றிட்ட நகல் (Case Sheet) அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட திரு. மணிவண்ணன் என்பவரை 06.11.2019 ம் தேதியன்றும் 07.11.2019 ம் தேதியன்றும் பரிசோதித்து சிகிச்சையளித்து அவருக்கு எடுக்கப்ட்ட பரிசோதனைகள் மற்றும் பெறப்பட்ட ஆலோசனைகளின் பேரில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்றளித்து அவரை மருத்துவமனையில் இருந்து 07.11.2019 ம் தேதியன்று விடுவித்தேன். ( **திரு. மணிவண்ணன் என்பவரின் CT Brain Report மற்றும்**

**Discharge Summary அ.சா.ஆ.18 மற்றும் அ.சா.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. **(மணிவண்ணனின் சேலம் அரசு மருத்துமவமனையின் மருத்துவ சிகிச்சை குறிப்புகள் அடங்கிய கோப்பு சான்றிட்ட நகல் (Case Sheet) அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னை போலீசார் விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தங்கராஜ் என்பவருக்கு ஏற்பட்ட கொடுங்காயம் உயரமான இடத்தில் இருந்து தவறி விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவர், எலும்பு முறிவு மருத்துவர், ஒட்டு உறுப்பு அறுவை சிகிச்சை மருத்துவர், காது மூக்கு தொண்டை மருத்துவர் மற்றும் பல் மருத்துவர் ஆகியோர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் தான் நான் சான்று வழங்கினேன் என்றால் சரிதான்.

**அரசு தரப்பில் மறுவிசாரணைக்கு அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

1. **கேள்வி:** உங்களது பணி அனுபவத்தின் அடிப்படையில் ஒரு CT Scan படம் அல்லது ஊடுகதிர் படத்தை பார்த்தாலே அதில் எலும்பு முறிவு உள்ளதா அது கொடுங்காயமா என்று கண்டறிந்து சொல்லமுடியுமா ? **பதில்** : சொல்லமுடியும். இந்த வழக்கிலும் CT Scan படத்தில் மூக்கு எலும்பு உடைந்திருப்பதை பார்த்து தான் தங்கராஜ் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியுள்ளேன்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.55 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**